ஜும்ஆ குத்பா பேருரை

# தலைப்பு: போதைப்பொருட்கள் மற்றும் மதுபானங்களின் விளைவுகள் குறித்த எச்சரிக்கைகள்

தேதி : 18 முஹர்ரம் 1448 ஹிஜிரி / கி.பி 3 ஜூலை 2026

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது; அவன் மனிதனைப் படைத்து, அவனுக்கு அறிவைக் கொண்டு அழகூட்டி, ஈமானைக் கொண்டு கண்ணியப்படுத்தினான். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். அவன் நமக்கு நன்மையையும் உபகாரத்தையும் செய்ய ஏவினான்; தீமைகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும், அறிவிற்கும் உடலிற்கும் தீங்கு விளைவிக்கும் அனைத்திலிருந்தும் நம்மைத் தடுத்தான். மேலும், நம்முடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதருமாவார்கள் என்று சாட்சி கூறுகிறேன்; அவர்கள் நேர்வழி மற்றும் (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிக்கும் தெளிவான சான்றுகளுடன் அனுப்பப்பட்டவர்கள். அல்லாஹ் அவர்தம் மீதும், அவரது குடும்பத்தினர், சிறப்பும் அறிவும் மிக்க அவரது தோழர்கள், அவரைப் பின்தொடர்ந்தவர்கள் மற்றும் மறுமை நாள் வரை நன்முறையில் அவர்களைப் பின்தொடர்பவர்கள் மீதும் அருளும், சாந்தியும், பரக்கத்தும் பொழிவானாக!

**இறைத்துதிக்கு பின் :** ரகசியங்களை நன்கு அறிந்த அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். ஏனெனில், அவனது பயபக்தியே இறுதி நாளுக்காகத் தயார் செய்யப்படுபவைகளில் மிகச் சிறந்ததாகும். அந்நாளில் (மறுமை நாளில்) இதயங்கள் தொண்டைக் குழிகளை வந்தடையும். செல்வங்களோ, சேமிப்புகளோ எவ்விதப் பயனும் தராத நாளாகும். தூயவனாகிய அல்லாஹ் கூறுகிறான்: "மேலும், (ஹஜ்ஜுக்குத் தேவையான) வழித்துணைகளைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்; நிச்சயமாக வழித்துணைகளில் மிகச் சிறந்தது தக்வா (இறையச்சம்) ஆகும். ஆகவே, அறிவுடையோரே! என்னை அஞ்சிக் கொள்ளுங்கள்." (அல்குர்ஆன் 2 : 197)

**அல்லாஹ்வின் அடியார்களே!** மனிதகுலம் எத்தனையோ துன்பங்களாலும், துயரங்களாலும், சோதனைகளாலும், பேரழிவுகளாலும் அவதிப்பட்டு வருகிறது. அவை மனிதனின் ஆற்றலை உறிஞ்சி, அவனது வாழ்வின் கட்டமைப்பையே உலுக்கி, அவனது விழுமியங்களைச் சீரழித்து, அவனது செல்வங்களை வீணடித்துள்ளன. இந்தத் துயரங்களில் மிகப்பாரியதும், இந்த அழிவுகளில் மிக ஆபத்தானதுமான ஒன்றுதான் போதைப்பொருட்கள் மற்றும் மதுபானங்களின் தீமையாகும். இன்று இவற்றை எதிர்கொள்வது மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் பெரும் கவலையாக மாறியுள்ளது. இவை எத்தனையோ சமுதாயங்களைச் சீரழித்துள்ளன; இவற்றின் காரணமாகக் குற்றங்களும், பாவங்களும் பரவிப் பெருகியுள்ளன.

மது மற்றும் போதைப்பொருட்களால் ஏராளமான தீமைகள் விளைகின்றன. அவை அழிவிற்கும் நாசத்திற்கும் காரணமாக அமைந்து, அடக்கியாளும் இறைவனின் கோபத்தைக் கொண்டு வந்து சேர்க்கின்றன; அத்துடன் நரகத்திற்கு இட்டுச் செல்லும் இருண்ட வழியுமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

( وَلَا تَقْتُلُوا أَنفُسَكُمْ إِنَّ اللَّهَ كَانَ بِكُمْ رَحِيمًا) [النساء : ٢٩

"மேலும், உங்களை நீங்களே கொன்று கொள்ளாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது மகா கருணையுடையவனாக இருக்கிறான்." (அல்குர்ஆன் 4 : 29)

மேலும் அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

وَعَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ: «لَا يَزْنِي الزَّانِي حِينَ يَزْنِي وَهُوَ مُؤْمِنٌ، وَلَا يَشْرَبُ الْخَمْرَ حِينَ يَشْرَبُهَا وَهُوَ مُؤْمِنٌ» [أَخْرَجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ]

"ஒரு விபச்சாரி விபச்சாரம் செய்யும்போது, அவன் மூமினாக (உண்மையான இறைநம்பிக்கையாளனாக) இருந்துகொண்டு விபச்சாரம் செய்வதில்லை; ஒருவன் மது அருந்தும்போது, அவன் மூமினாக இருந்துகொண்டு மது அருந்துவதில்லை." (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்)

போதையானது மனித அறிவையும், மார்க்கத்தையும் பாழாக்குகிறது. மேலும் அதனை உட்கொள்பவனுக்கு இழிவான செயல்களையே அது மிச்சப்படுத்துகிறது; அவனை வெறுத்து ஒதுக்கக்கூடிய, கேவலமான நிலைக்கு ஆளாக்குகிறது. அது எவ்வளவு செல்வங்களை அழித்திருக்கிறது! அதன் காரணமாக நிலைமைகள் எவ்வளவு மோசமடைந்துள்ளன! எவ்வளவு ஆற்றல்கள் வீணடிக்கப்பட்டு, நேரங்கள் பாழாக்கப்பட்டுள்ளன! அது ஏற்படுத்திய வாகன விபத்துக்கள், பாலியல் வன்புணர்வுகள் மற்றும் திருட்டுக் குற்றங்களைச் சற்று எண்ணிப் பாருங்கள்! அது எத்தனை ஆண், பெண் குழந்தைகளை அநாதைகளாக்கியுள்ளது! எத்தனையோ பகைகளை மூட்டியுள்ளது! கண்ணியமிக்க, சான்றோரின் குடும்பங்களுக்கு எத்தனையோ அவமானங்களைக் கொண்டு சேர்த்துள்ளது! எத்தனை தலைக்குனிவை ஏற்படுத்தி வைத்து, எத்தனை ஆன்மாக்களை இழிவுபடுத்தியுள்ளது! இதைப் பற்றித்தான் இஸ்லாமிய ஷரிஅத் எச்சரித்துள்ளது, தொட்டுணரக்கூடிய யதார்த்தமும் இதனை உறுதிப்படுத்துகிறது.

**நற்பண்புகள் மிக்க சமுதாயமே!** அறிவுடைய ஒருவன் எவ்வாறு இந்த உயிர்க்கொல்லி நச்சுக்களையும் அழிவு தரும் நோய்களையும் நாடிச் செல்வான்? மார்க்கம், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் ஆரோக்கியம் என இதன் தீமைகள் மிக அதிகம். இமாம் ஹஸன் அல்-பஸரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "அறிவு என்பது விலை கொடுத்து வாங்குவதாக இருந்திருந்தால், மனிதர்கள் அதன் விலையை உயர்த்திப் பேசியிருப்பார்கள்; ஆனால், தன் செல்வத்தைக் கொடுத்து தன் அறிவையே பாழாக்குபவனைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன்!"

அல்லாஹ்வின் அடியார்களே! மனிதன் தன் அறிவை இழக்கும்போது, அவன் சீரழிவை ஏற்படுத்துகிறான், அக்கிரமம் செய்கிறான், வரம்பு மீறி நடக்கிறான், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கிறான். இதுவே தீமைகளின் மொத்த வடிவமும், ஆபத்துகளின் இருப்பிடமுமாகும்.

நேர்வழி நடந்த கலீஃபா உதுமான் இப்னு அஃப்பான் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

يَقُولُ الْخَلِيفَةُ الرَّاشِدُ عُثْمَانُ بْنُ عَفَّانَ : (اجْتَنِبُوا الْخَمْرَ؛ فَإِنَّهَا أُمُّ الْخَبَائِثِ، إِنَّهُ كَانَ رَجُلٌ مِمَّنْ خَلَا قَبْلَكُمْ تَعَبَّدَ، فَعَلِقَتْهُ امْرَأَةٌ غَوِيَّةٌ، فَأَرْسَلَتْ إِلَيْهِ جَارِيَتَهَا ، فَقَالَتْ لَهُ : إِنَّا نَدْعُوكَ لِلشَّهَادَةِ، فَانْطَلَقَ مَعَ جَارِيَتِهَا حَتَّى أَفْضَى إِلَى امْرَأَةٍ وَضِيئَةٍ؛ عِنْدَهَا غُلَامٌ وَبَاطِيَةُ خَمْرٍ ، فَقَالَتْ: إِنِّي وَاللهِ مَا دَعَوْتُكَ لِلشَّهَادَةِ، وَلَكِنْ دَعَوْتُكَ لِتَقَعَ عَلَيَّ، أَوْ تَشْرَبَ مِنْ هَذِهِ الْخَمْرَةِ كَأْسًا، أَوْ تَقْتُلَ هَذَا الْغُلَامَ. قَالَ : فَاسْقِينِي مِنْ هَذَا الْخَمْرِ كَأْسًا ـ ظَنًّا مِنْهُ أَنَّ الْخَمْرَ أَهْوَنُهَا ـ ، فَسَقَتْهُ كَأْسًا، قَالَ : زِيدُونِي ، فَلَمْ يَرِمْ حَتَّى وَقَعَ عَلَيْهَا وَقَتَلَ النَّفْسَ ، فَاجْتَنِبُوا الْخَمْرَ؛ فَإِنَّهَا وَاللَّهِ لَا يَجْتَمِعُ الْإِيمَانُ وَإِدْمَانُ الْخَمْرِ إِلَّا لَيُوشِكُ أَنْ يَخْرُجَ أَحَدُهُمَا صَاحِبَهُ) [أَخْرَجَهُ النَّسَائِيُّ، وَصَحَّحَهُ الْأَلْبَانِيُّ].

“மதுவை தவிர்ந்து கொள்ளுங்கள்; ஏனெனில் அது அனைத்துத் தீமைகளின் தாயாகும். உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களில் ஒரு வணக்கசாலி இருந்தார். ஒரு வழிகெட்ட பெண் அவர் மேல் ஆசைப்பட்டு, தன் பணிப்பெண்ணை அவரிடம் அனுப்பி, ‘நாங்கள் உம்மை ஒரு சாட்சியம் சொல்வதற்காக அழைக்கிறோம்’ என்று கூறினாள். அவர் அந்தப் பணிப்பெண்ணுடன் சென்றார். அழகிய ஒரு பெண்ணிடம் அவர் சென்றடைந்தபோது, அவளிடம் ஒரு சிறுவனும், ஒரு பாத்திரம் மதுவும் இருந்தது. அப்பெண் கூறினாள்: ‘அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மைச் சாட்சி சொல்ல அழைக்கவில்லை; மாறாக என்னுடன் தவறான உறவு கொள்ள அல்லது இந்த மதுவிலிருந்து ஒரு கோப்பை பருக அல்லது இந்தச் சிறுவனைக் கொலை செய்யவே அழைத்தேன்’. மது பருகுவதுதான் இதில் லேசானது என்று எண்ணி, ‘எனக்கு இந்த மதுவிலிருந்து ஒரு கோப்பை புகட்டு’ என்று அவர் கூறினார். அவள் ஒரு கோப்பை புகட்டினாள். ‘எனக்கு இன்னும் அதிகமாக்கு’ என்று அவர் கூறினார். அவர் அந்தப் பெண்ணுடன் தவறான உறவு கொண்டு, அந்த உயிரையும் கொலை செய்யும் வரை அந்த இடத்தை விட்டு நகரவில்லை. எனவே, மதுவைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் மீது ஆணையாக, ஈமானும் மதுவுக்கு அடிமையாவதும் ஒருசேர இணையாது; அவற்றில் ஒன்று மற்றொன்றை வெளியேற்றிவிடும்.” (நூல்: நஸாயீ, அல்பானி அவர்களால் ஸஹீஹ் என சான்றளிக்கப்பட்டது)

**இஸ்லாமிய சகோதரர்களே!** இந்த மதுவை விடவும் மிக மோசமானது பல்வேறு மாத்திரைகள், மயக்கமூட்டும் பொடிகள், போதையூட்டும் ஊசிகள் போன்ற போதைப்பொருட்களாகும். இவை மனித வாழ்வின் ஐந்து அத்தியாவசியத் தேவைகளான: அறிவு, செல்வம், மானம், மார்க்கம் மற்றும் உயிர் ஆகியவற்றை அழித்துவிடுகின்றன.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

يَقُولُ شَيْخُ الْإِسْلَامِ ابْنُ تَيْمِيَّةَ رَحِمَهُ اللَّهُ تَعَالَى: (إِنَّ الْحَشِيشَةَ حَرَامٌ ، يُحَدُّ مُتَنَاوِلُهَا كَمَا يُحَدُّ شَارِبُ الْخَمْرِ ، وَهِيَ أَخْبَثُ مِنَ الْخَمْرِ ؛ مِنْ جِهَةِ أَنَّهَا تُفْسِدُ الْعَقْلَ وَالْمِزَاجَ، حَتَّى يَصِيرَ فِي الرَّجُلِ تَخَنُّثٌ وَدِيَاثَةٌ، وَغَيْرُ ذَلِكَ مِنَ الْفَسَادِ، وَأَنَّهَا تَصُدُّ عَنْ ذِكْرِ اللهِ).

“நிச்சயமாக ஹஷீஷ் (கஞ்சா/போதைப்பொருள்) ஹராமானதாகும் (விலக்கப்பட்டது); மது அருந்துபவருக்குத் தண்டனை வழங்கப்படுவது போல் அதனை உட்கொள்பவனுக்கும் தண்டனை வழங்கப்படும். அது மதுவை விடவும் அசுத்தமானது; ஏனெனில் அது அறிவையும் குணத்தையும் கெடுத்து, மனிதனைப் பேடித்தனத்திற்கும், தன்மானமற்ற நிலைக்கும் (தியாஸத்) மற்றும் பல சீரழிவுகளுக்கும் இட்டுச் செல்கிறது; மேலும் அது அல்லாஹ்வின் நினைவை விட்டும் தடுக்கிறது.” இதுவே உண்மையும் சரியானதுமாகும்; மது விலக்கப்பட்டது என்பது அனைத்து வகையான போதைப்பொருட்களையும் போதையூட்டிகளையும் தடை செய்வதையும் உள்ளடக்குகிறது.

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

فَعَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ: «كُلُّ مُسْكِرٍ خَمْرٌ، وَكُلُّ مُسْكِرٍ حَرَامٌ». [أَخْرَجَهُ مُسْلِمٌ].

“போதையூட்டும் ஒவ்வொன்றும் மதுவாகும்; போதையூட்டும் ஒவ்வொன்றும் ஹராம் (விலக்கப்பட்டது) ஆகும்.” (நூல்: முஸ்லிம்)

**மனிதர்களே!** இந்தத் தீமைக்கான காரணங்களை நாம் ஆராயும் போது, அவை பலவீனமான ஈமான் (இறைநம்பிக்கை), ஷைத்தானின் ஆதிக்கம் ஆகியவற்றில் இருப்பதை நாம் காண்கிறோம். இதனுடன் கொடிய வறுமை/வெறுமை, அதிகப்படியான செல்வம், தீய நட்பு, குருட்டுத்தனமான பின்பற்றுதல் மற்றும் மனோ இச்சைப்படி நடப்பது ஆகியவையும் இதற்குக் காரணங்களாகும். “இளமையும், ஓய்வு நேரமும், தாராளமான செல்வமும்... மனிதனைச் சீரழிப்பதில் மிகப்பெரிய சீரழிவாகும்!”

இன்னும் காரணங்களில் ஒன்று: பெற்றோர் பிள்ளைகளைக் கண்டுகொள்ளாமல் விடுவதாகும்; அவர்கள் வீதிகளில் அலைந்து திரிந்து, அறிவிலிகளின் மடியில் வளர்கிறார்கள்; தமக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் துரதிர்ஷ்டத்தைத் தேடித்தருகிறார்கள். இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

فَعَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: «وَالرَّجُلُ رَاعٍ عَلَى أَهْلِ بَيْتِهِ، وَهُوَ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ» [أَخْرَجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ].

“ஒரு மனிதன் தன் குடும்பத்தினருக்குப் பொறுப்பாளன் ஆவான்; அவன் தன் பொறுப்பின் கீழ் உள்ளவர்கள் பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவான்.” (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்)

போதைப்பொருள் என்ற சேற்றில் விழுந்தவர்கள் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளட்டும்! பூமியையும் வானங்களையும் படைத்த இறைவனின் முன்னிலையில் நிறுத்தப்படும் நாளை நினைத்துப் பார்க்கட்டும்! உடனே அதிலிருந்து விலகி, கலப்பற்ற உண்மையான பாவமன்னிப்பை (தவ்பா) தேட முற்படட்டும்; ஏனெனில் இப்போது அது சாத்தியமானது, அதன் கதவும் திறந்தே இருக்கிறது. கவலையிலும் வேதனையிலும் விழுந்து கைசேதப்படும் வரை காத்திருக்க வேண்டாம்; பிறகு நீங்கள் வருந்துவீர்கள், ஆனால் அது வருந்துவதற்கான நேரமாக இருக்காது.

அல்லாஹ் உங்களைப் பாதுகாப்பானாக! இந்த நச்சுக்களின் விளைவாகத் தீங்கிழைக்கும் ஒவ்வொரு கரமும், அழியும் ஒவ்வொரு உயிரும், வீணடிக்கப்படும் செல்வமும், சீரழியும் ஆரோக்கியமும் - இவற்றின் பாவச் சுமைகளில் ஒரு பங்கு இதனை வியாபாரம் செய்பவர்கள் (முரவ்விஜீன்) மீதும் உண்டு என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவர்கள் சீரழிவின் கருவிகள்; நாடுகளையும், பொது ஜனமக்களையும் கெடுப்பதற்காக இப்லீஸ் (ஷைத்தான்) அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறான். அவர்கள் பாவிகள், இம்மையிலும் மறுமையிலும் தண்டணைக்குரியவர்கள். அவர்கள் அல்லாஹ்வை அஞ்சட்டும், வாக்கு மாறாத இறைவனின் எச்சரிக்கையை நினைவுகூரட்டும்:

إِنَّ الَّذِينَ يُحِبُّونَ أَن تَشِيعَ الْفَاحِشَةُ فِي الَّذِينَ ءَامَنُوا لَهُمْ عَذَابٌ أَلِيمٌ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَاللَّهُ يَعْلَمُ وَأَنتُمْ لَا تَعْلَمُونَ ﴾ [النور: ١٩]

"நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டவர்களிடையே மானக்கேடான விஷயங்கள் பரவ வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நோவினை தரும் வேதனையுண்டு; அல்லாஹ்வே அறிவான், நீங்கள் அறியமாட்டீர்கள்." (அல்குர்ஆன் 24 : 19) இது (மானக்கேடானவை பரவ வேண்டும் என்று) விரும்பியவனுக்கே இந்த நிலை என்றால், அதற்கு மூலகாரணமாக இருந்தவனின் நிலை எப்படி இருக்கும்?! என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் குர்ஆனிலும், சுன்னாவிலும் பரக்கத் செய்வானாக! அவைகள் இரண்டிலும் உள்ள நேர்வழி மற்றும் ஞானத்தைக் கொண்டு எனக்கும்

உங்களுக்கும் பயனளிக்கச் செய்வானாக! நீங்கள் செவியுற்றதை நான் கூறுகிறேன்; எனக்காகவும், உங்களுக்காகவும், ஒட்டுமொத்த சமுதாயத்திற்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுங்கள், நிச்சயமாக அவன் மகா மன்னிப்பவனும், பெருங்கருணையாளனுமாவான்.

## இரண்டாவது உரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன்; மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும், தூதரும், அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமாவார்கள் என்று சாட்சி கூறுகிறேன். அல்லாஹ் அவர்தம் மீதும், அவரது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அவரை பின்தொடர்ந்தவர்கள் அனைவர் மீதும் சாந்தியும், அருளும் உண்டாவதாக!

**இறைத்துதிக்கு பின் :** அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சிக்கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகிறான்:

(وَمَن يَتَّقِ اللَّهَ يُكَفِّرْ عَنْهُ سَيِّئَاتِهِ وَيُعْظِمْ لَهُ أَجْرًا ) [الطلاق: ٥

"மேலும், எவர் அல்லாஹ்வை அஞ்சுகிறாரோ, அவர்தம் பாவங்களை அவரை விட்டும் அவன் போக்கிவிடுவான்; இன்னும் அவருக்கு நற்கூலியைப் பெரிதாக்குவான்." (அல்குர்ஆன் 65 : 5)

**அல்லாஹ்வின் அடியார்களே!** இறைநம்பிக்கையாளர்களைக் காப்பாற்றுவதற்கான வழிகள் பல உள்ளன, அல்லாஹ்விற்கே புகழனைத்தும், அதற்கான வழிமுறைகளும் ஏராளமாய் உள்ளன. இந்த வழிமுறைகளில் மிகவும் பயனுள்ளது: போதை பழக்கமுடையோரின் மனதில் மார்க்க உணர்வை (இறையச்சத்தை) வலுப்படுத்துவதாகும். இந்த மார்க்க உணர்வின் காரணமாகத்தான், மதுவை விலக்கி அதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு குர்ஆன் வசனம் இறங்கியவுடன், மதீனாவின் வீதிகளில் மது ஆறாக ஓடியதை நாம் கண்டோம். அல்லாஹ் கூறுகிறான்:

يَأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ مِنْ عَمَلِ الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ إِنَّمَا يُرِيدُ الشَّيْطَانُ أَن يُوقِعَ بَيْنَكُمُ الْعَدَاوَةَ وَالْبَغْضَاءَ فِي الْخَمْرِ وَالْمَيْسِرِ وَيَصُدَّكُمْ عَن ذِكْرِ اللَّهِ وَعَنِ الصَّلَاةِ فَهَلْ أَنتُم مُّنتَهُونَ ﴾ [المائدة: ٩٠ - ٩١]

"ஈமான் கொண்டவர்களே! மதுபானமும், சூதாட்டமும், சிலைகளும், அம்புகள் எறிந்து குறிபார்ப்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும்; ஆகவே, நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுவின் மூலமாகவும், சூதாட்டத்தின் மூலமாகவும் உங்களிடையே பகையையும் குரோதத்தையும் ஏற்படுத்தி, அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடத்தான்; ஆகவே, நீங்கள் (இவற்றிலிருந்து) விலகிக் கொள்ள மாட்டீர்களா?" (அல்குர்ஆன் 5 : 90-91) "உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு அறிவிப்பாளரை ஏவி,

فَأَمَرَ رَسُولُ اللَّهِ ﷺ مُنَادِيًا يُنَادِي : أَلَا إِنَّ الْخَمْرَ قَدْ حُرِّمَتْ». [مُتَّفَقٌ عَلَيْهِ مِنْ حَدِيثِ أَنَسٍ]»

'அறிந்து கொள்ளுங்கள், நிச்சயமாக மது ஹராமாக்கப்பட்டுவிட்டது' என்று அறிவிக்கச் செய்தார்கள்." (நூல்: புகாரி மற்றும் முஸ்லிம், அனஸ் ரழி அவர்களின் அறிவிப்பு) இமாம் அஹ்மதின் முஸ்னது நூலில் அபூஹுரைரா (ரழி) வழியாக வரும் ஹதீஸில் (ஷுஐப் அல்-

அர்னவூத் அவர்களால் ஹஸன் என சான்றளிக்கப்பட்டது): குர்ஆனின் வசனமான "விலகிக் கொள்ள மாட்டீர்களா?" என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தோழர்கள், "எங்கள் இறைவா! நாங்கள் விலகிக் கொண்டோம்!" என்று கூறினார்கள்.

முக்கியமான வழிமுறைகளில் மற்றொன்று: போதைக்கு அடிமையானவரை அந்தத் தீய சூழல்களிலிருந்தும், கெட்ட நண்பர்களிடமிருந்தும் தூரப்படுத்துவதாகும்; பாவமன்னிப்புப் பெற்று மார்க்கத்தில் நிலைத்திருக்க அவருக்கு உதவி புரியும் நல்ல மனிதர்களின் தோழமையின் பக்கம் அவரை வழிநடத்துவதாகும். அத்தோடு, போதைக்கு அடிமையானவர்களைக் குணப்படுத்துவதற்கான சரியான மருத்துவ முறைகளைக் கையாள்வதும், அவர்களின் நேரங்களைப் பயனுள்ள விஷயங்களைக் கொண்டு நிரப்புவதுமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

فَمَن تَابَ مِنْ بَعْدِ ظُلْمِهِ، وَأَصْلَحَ فَإِنَّ اللَّهَ يَتُوبُ عَلَيْهِ إِنَّ اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ ﴾ [المائدة: ٣٩]

"ஆனால், எவர் தமது அநியாயத்திற்குப் பின்னர், பாவமன்னிப்புக் கோரி (தம்மைச்) சீர்திருத்திக் கொள்கிறாரோ, நிச்சயமாக அல்லாஹ் அவரது பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்கிறான்; நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன், மகா கருணையுடையவன்." (அல்குர்ஆன் 5 : 39)

**அல்லாஹ்வின் அடியார்களே!** உள்துறை அமைச்சகம் மற்றும் சுகாதார அமைச்சகத்தில் உள்ள சகோதரர்களின் சிறப்பான முயற்சிகளைக் குறிப்பிட நாம் மறக்கக் கூடாது. முதலாவது அமைச்சகம் (உள்துறை) இந்த நச்சுக்களைக் கட்டுப்படுத்துவதிலும், தடுப்பதிலும், அதனை விற்பனை செய்பவர்களைப் பின்தொடர்ந்து பிடிப்பதிலும், அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளைப் பெற்றுத் தருவதிலும் செயலாற்றுகிறது. இரண்டாவது அமைச்சகம் (சுகாதாரம்) போதைக்கு அடிமையானவர்களை அரவணைத்து, அவர்களுக்கு மறுவாழ்வுச் சிகிச்சை அளித்து, அவர்களை மீண்டும் தங்களின் இயல்பு வாழ்க்கைக்குத் திருப்புவதில் செயலாற்றுகிறது. எனவே, இது போன்ற நிலைகளில் யாரையாவது கண்டால், உடனடியாக அவர்களைச் சிகிச்சை மையங்களில் சேர்ப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகவல் கொடுங்கள்; போதை மற்றும் மதுபானங்களின் சூழலில் மூழ்கிப் போகும் படியாக அவர்களை கைவிட்டுவிடாதீர்கள்.

யா அல்லாஹ்! உன்னுடைய ஹராமான (விலக்கப்பட்ட) காரியங்களை விட்டும் உனது ஹலாலான (அனுமதிக்கப்பட்ட) காரியங்களைக் கொண்டு எங்களுக்குப் போதுமாக்குவாயாக! உன்னையல்லாத பிறரின் தேவைகளை விட்டும் உனது அருளைக் கொண்டு எங்களைச் செல்வந்தர்களாக்குவாயாக! யா அல்லாஹ்! எங்கள் இதயங்களில் ஈமானை (இறைநம்பிக்கையை) நேசத்துக்குரியதாக்கி, அதை அழகூட்டுவாயாக! நிராகரிப்பு, பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றை எங்களுக்கு வெறுக்கத்தக்கதாக்கி, எங்களை நேர்வழி பெற்றோரில் ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கண்ணியமளிப்பாயாக! ஷிர்க்கையும் முஷ்ரிக்குகளையும் இழிவுபடுத்துவாயாக! உனது மார்க்கத்திற்கும், உனது வேதத்திற்கும், உனது நபியின் சுன்னாவிற்கும், உனது முஃமினான அடியார்களுக்கும் உதவி செய்வாயாக!

யா அல்லாஹ்! முஃமினான, முஸ்லிமான ஆண்கள் மற்றும் பெண்கள், அவர்களில் உயிருடன் இருப்பவர்கள் மற்றும் மரணித்தவர்கள் அனைவரையும் மன்னிப்பாயாக! யா அல்லாஹ்! எங்கள் அமீரையும் அவரது வாரிசையும் உனது நேர்வழியின் பால் செலுத்துவாயாக! அவர்கள் இருவரின் செயல்களையும் உனது ஏவலுக்கும் உனது திருப்திக்கும் உகந்ததாக ஆக்குவாயாக! இந்த நாட்டை அதாவது குவைத்தை அச்சமற்ற, அமைதியான, வளம்மிக்க, தாராளமான நாடாகவும், பாதுகாப்பு மற்றும் ஈமானின் இல்லமாகவும் ஆக்குவாயாக! அவ்வாறே ஏனைய முஸ்லிம் நாடுகளையும் ஆக்குவாயாக!

**வெள்ளிக்கிழமை தொழுகைக்கான மாதிரி பிரசங்க தயாரிப்புக் குழு**